இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அவர் அப்பத்தை எடுத்து ,கடவுளைப் போற்றி அதைப் பிட்டு ,அவர்களுக்குக் கொடுத்து , “இதைப் பெற்றுக்கொள்ளுங்கள் ;இது எனது உடல்” என்றார். பின்பு அவர் கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்தார். அனைவரும் அதிலிருந்து பருகினர். அப்பொழுது அவர் அவர்களிடம்“ ,இது எனது உடன்படிக்கையின் இரத்தம் ;பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம். இனிமேல் இறையாட்சி வரும் அந்நாளில்தான் நான் திராட்சைப்பழ இரசத்தைக் குடிப்பேன் ;அதுவரை ஒருபோதும் குடிக்க மாட்டேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார் (மாற்கு 14:22-25)

# ஆயர்கள் மாமன்றம் மறைமாவட்டங்களில் துவங்கும்

## -திருத்தந்தை அறிவித்தார்

**வத்திக்கான்** திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வருகிற அக்டோபர் மாதத்தில், மூன்றாண்டு ஆயர்கள் மாமன்றப் பயணம் ஒன்றைத் துவக்கிவைப்பார் என்றும், மறைமாவட்டங்கள், நாடுகள், மற்றும் உலக அளவில் நடைபெறும் அப்பயணம், கருத்தறிதல், மற்றும், தெளிந்துதேர்தல் முறைகளில் நடைபெற்று, இறுதியில், வத்திக்கானில் 2023-ம் ஆண்டு அக்டோபரில், உலக ஆயர்கள் மாமன்றத்தோடு நிறைவடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது தலைமைப்பணியைத் துவக்கியது முதல், திருஅவையின் உலகளாவிய பண்பு, காணக்கூடிய முறையில் தெளிவாக வெளிப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தி வரும் இக்காலத்தில், அதற்கேற்ற முறையில், 2023-ம் ஆண்டில் நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டுள்ள உலக ஆயர்கள் மாமன்றம் இடம்பெறும். உலக ஆயர்கள் மாமன்றம், வத்திக்கானில் மட்டுமல்லாமல், ஐந்து கண்டங்களிலும், ஒவ்வொரு தலத்திரு அவையிலும் இச்சந்திப்புக்கள் நடைபெறும் என்பதை விளக்க, உலக ஆயர்கள் மாமன்ற பொதுச் செயலகம் தயாரித்த புதிய நடைமுறை விளக்கங்களை, மே 21, இவ்வெள்ளியன்று, திருத்தந்தை அங்கீகரித்துள்ளார்.

### முதல் நிலை

உலக ஆயர்கள் மாமன்றத்தின் முதல் படி, வருகிற அக்டோப்ர 9, 10 ஆகிய தேதிகளில் வத்திக்கானில் திருத்தந்தை தலைமையேற்று நடத்தும், இறை வேண்டல், திருப்பலி, தியானம், சிந்தனை ஆகியவற்றோடு துவக்கி வைக்கப்படும்.

### மறைமாவட்ட அளவில்

இரண்டாவதாக, அது, மறைமாவட்ட அளவில், தல ஆயரின் தலைமையில், வருகிற அக்டோபர் 17-ம் தேதி துவங்கும். இது, இறைமக்களின் கருத்தறிதல் மற்றும், பங்கேற்புடன் நடைபெறும். அதன் அடிப்படையில் மறைமாவட்ட மாமன்றத்தில் கருத்துப்பரிமாற்றங்கள் நடைபெறும். அது போன்று திருப்பீட பல்வேறு துறைகள், இருபால் துறவு சபை தலைவர்கள் அமைப்பு, துறவியர் கூட்டமைப்புகள், பன்னாட்டு பொது நிலையினர் இயக்கங்கள், பல்கலைக் கழகங்கள், மற்றும், இறையியல் துறைகளுக்கும் கேள்வித் தொகுப்பு அனுப்பி வைக்கப்படும்.



ஒவ்வோர் ஆயரும், 2021-ம் ஆண்டு, அக்டோபர் மாதத்திற்குமுன், மறைமாவட்ட பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும். அவர் தலஆயர் பேரவையோடு இணைந்து செயல்படுவார். பின்னர், பொதுச்செயலகத்தோடு ஒத்துழைப்பதற்கு, ஆயர் பேரவை ஒருவரையோ அல்லது ஒரு குழுவையோ நியமிக்கும்.

மறைமாவட்ட மாமன்றத்தின் பரிந்துரைகள், தல ஆயர் பேரவைக்கு அனுப்பப்படும். அந்தப் பேரவை அவற்றைத் தொகுத்து, உலக ஆயர்கள் மாமன்றப் பொதுச்செயலகத்திற்கு அனுப்பி வைக்கும். இந்த முதல்நிலை, 2022-ம் ஆண்டு ஏப்ரலில் நிறைவடையும்.

பொதுச்செயலகம், இவற்றை வைத்து, முதல் வரைவுத் தொகுப்பைத் தயாரித்து, 2022-ம் ஆண்டு செப்டம்பரில், தலத்திரு அவைகளுக்கு அனுப்பி வைக்கும்.

### கண்டம் வாரியாக: கலந்துரையாடல் மற்றும் தெளிந்து தேர்தல்

2022-ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து, 2023 -ம் ஆண்டு மார்ச் வரை மாமன்ற தயாரிப்புப் பணிகள் கண்டம் வாரியாக நடைபெறும். முதல் வரைவுத் தொகுப்பின் அடிப்படையில் கலந்துரையாடல் நடத்தி, இவை அனுப்பிவைக்கும் பரிந்துரை தொகுப்பு, 2023-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பொதுச்செயலகத்திற்கு வந்துசேரும்.

இந்தத் தொகுப்பின் அடிப்படையில் பொதுச் செயலகம், இரண்டாவது வரைவுத் தொகுப்பை, 2023-ம் ஆண்டு ஜூனில் அனுப்பி வைக்கும். அதற்குப்பின் 2023-ம் ஆண்டு அக்டோபரில் வத்திக்கானில் நடைபெறும் உலக ஆயர்கள் மாமன்றத்தோடு இது நிறைவடையும்

**-மேரி தெரேசா: வத்திக்கான் செய்திக**

# தெ ஹெரால்டு வார பத்திரிகைக்குப் புதிய ஆசிரியர் நியமனம்

**கோலாலம்பூர்:** எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் ‘தெ ஹெரால்டு’ வார பாத்திக்கைக்குப் புதிய தலைமை ஆசிரியராக பெட்ரிசியா பிரெய்ரா அவர்கள் நியமிக்கட்டுள்ளார். இவர் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கோலாலம்பூர் மாமறை மாட்டத்தில் பேராயரின் தகவல் தொடர்பு அலுவலகத்தில் தகவல் தொடர்புப் பணியாளராகப் பொறுபேற்றிருந்தார்.

இவர் தனியார் துறையிலும், திருஅவையிலும் தகவல் தொடர்பு துறையில் ஆழ்ந்த அனுபவம் உள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, தெ ஹெரால்டு பத்திரிக்கையின் தலைமை ஆசிரியர் பொறுப்பை திறம்பட நிறைவேற்றுவார் என்பதில்

அதே வேளையில் கடந்த 27 ஆண்டுகள் இப்பத்திரிக்கையின் ஆசரியராக இருந்து, அயராது உழைத்த அருள்தந்தை லோரன்ஸ் என்ரூ அவர்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். இவர் இப்பத்திரிக்கையின் முதல் ஆசிரியர் என்பதோடு, இவ்விதழின் சிறப்புக்கும் மதிப்புக்கும் அயராது உழைத்தவராவார். இப்பத்திரிக்கையானது கடந்த 8 செப்டம்பர் 1998-ல், கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தில் தொடங்கப்பட்டக் காலத்திலிருந்து, தீபகற்ப மலேசியாவிலும் சபா மற்றும் சரவாக்கிலும் இப்பத்திரிக்கைத் தடைகளின்றி விநியோகிக்கப்படுவதை உறுதிச் செய்த பெருமை இவரைச் சேரும் என்றால் மிகையாகாது.

தமின்றி உடனுக்குடன் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற குறிக்கோளைத் தமது குழுவினரோடு சிறப்பாக நிறைவேற்றி வந்தார் என்று துணிந்து கூறலாம். அவ்வாறே, பங்குகளின் நிகழ்வுகளும் செய்திகளும் உடனுக்குடன் வெளியிடப்பட்டன.

இந்த கொவிட்-19 நடமாட்டக் கட்டுப்பாடு காலத்திலும் இயங்கலை வாயிலாக இப்பத்திரிக்கைத் தொடர்ந்து வெளிவருவதை இவர் உறுதிச் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, புதிதாக தலைமை ஆசிரியர் பொறுப்பேற்கும் பெட்ரிசியா பிரெய்ரா அவர்களின் பொறுப்பில் ’தெ ஹெரால்டு’ தொடர்ந்து வெற்றிநடை போடுவதோடு,

இப்பத்திரிக்கையின் வளர்ச்சி நிலைநாட்டப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஆங்கிலம், மலாய், மென்டரின் மற்றும் தமிழ் (இறைத்தூதன்) என நான்கு மொழிகளிலும் வாரந்தோறும் வெளிவரும் தெ ஹெரால்டு பத்திரிக்கை தொடர்ந்து அதன் வளர்ச்சி சிகரத்தை அடைய வாழ்த்துக்கள்.

*ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்,*
*பினங்கு மறைமாவட்டம்*

*பேராயர் ஜூலியன் லியாவ்,*
*கோலாலம்பூர் மாமறைமாவட்டம்.*

*ஆயர் பெர்ணர்ட் பவுல்,*
*மலாக்கா- ஜோகூர் மறைமாவட்டம்.*

# விவிலியத்தை மட்டும் கொண்டு மறைக்கல்வி கற்பிக்கலாமா?

பிரிந்த கிறிஸ்தவச் சபையினர் விவிலியத்தை மட்டும் கொண்டு மறைக்கல்வி போதிக்கிறார்கள். இதனால் அவர்களின் பிள்ளைகள் விவிலிய அறிவில் சிறந்து விளங்குகிறார்கள். அப்படியிருக்க நாம் மட்டும் ஏன் பாடப் புத்தகங்களைக் கொண்டு மறைக்கல்வி கற்பிக்கிறோம் ?

**மெக்டலின் சார்ல்ஸ், ஜாசின், மலாக்கா**

பிரிந்த கிறிஸ்தவச் சபையினர் கொண்டிருக்கும் நம்பிக்கை வாழ்வுக்கும் கத்தோலிக்கர் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை வாழ்வுக்குமிடையே நிலவும் வேறுபாடுகள் பல. தாங்கள் கூறியபடி, பிரிந்த சபையினருக்கு விவிலியம் மட்டுமே அவர்களது போதனை அனைத்துக்கும் மூலமாக உள்ளது. மேலும், பிரிந்த சபைகள் என்று பல சபைகள் உள்ளன. ஆனால், அவர்களுக்கு மண்ணகத்தில் ஒரு பொது வான தலைமைத்துவம் கிடையாது.

அடுத்து, பிரிந்த சபையினருக்கு நீண்ட கால வரலாறும் இல்லை. ஆத்ரடோக்கஸ் சபைக்கு 1000 ஆண்டு வரலாறும், மற்ற சபைகளுக்கு அதிகபடியாக ஏறக்குறைய 500 ஆண்டுக்கால வரலாறும் தான் உள்ளது. ஆனால் கத்தோலிக்கத் திருஅவைக்கு 2000 ஆண்டு கால வரலாறு உண்டு. இதன் வரலாறு திருத்தூதர்கள் வழிவந்த வரலாறு. இயேசுவே ஏற்படுத்திக் கொடுத்த வரலாறு.

நான்கு நற்செய்திகளும் இதர திருமுகங் களும், இறுதி நூலான திருவெளிப்பாடும் ஏறக்குறைய கி.பி. 60 தொடங்கி 100-ஆம் ஆண்டாளவில் எழுதப்பட்டன. இவை அனைத்தும் புத்தக வடிவில் இல்லை. ஏனெனில் அப்போது அச்சு இயந்திரம் கண்டுப்பிடிக்கப்படவில்லை. எனவே, அனைவரது போதனையும் கையால் பிரதிகள் எழுதப்பட்டு வாய்மொழியாகவே மறைக்க ல்வி வழங்கப்பட்டது. இதை நாம் மரபு வழி போதனை என்கிறோம்.

ஏறக்குறைய முதல் 250 ஆண்டுகள் விவிலியம் தொகுக்கப்படவில்லை. விவிலியம் என்று ஒன்று கிடையாது. பழைய ஏற்பாட்டு நூல்கள் தான் இருந்தன. எனவே, வாய்மொழியாகவே, இயேசுவின் நற்செய்தி யோடு மற்ற நம்பிக்கை உண்மைகளும் திருத்தூதர்களிடமிருந்து பெற்று இந்தியா உட்பட ( புனித தோமா) பல பகுதிகளில் போதிக்கப்பட்டன. அக்காலத்தில் ‘டிடாக்கே’ என்ற திருத்தூதர்களின் போதனைகளின் தொகுப்பே அதிகமாகப் பயன்படுத்தப் பட்டது.

அதே, வேளையில் நற்செய்தியாளர்களும் பவுல் அடிகளும் எழுதாத மற்றும் பல உண்மைகளைத் தொடக்கத் திருஅவை அறிந்திருந்தது. அவற்றுள் அன்னை மரியாவின் பெற்றோர் பெயர், ஆயர்களின் தோற்றம், பேதுரு வழிவந்த திருத்தந்தையர் நியமனம், விரிவான நற்கருணை கொண்டாடம் போன்றவை அடங்கும். அடுத்து 300 ஆண்டுகள் திருஅவை சந்தித்த சவால்களை, துன்பத் துயரங்களை யார் எழுதியது? பாரம்பரியம் அல்லது மரபு ஒன்றே திருஅவைக்கு இவற்றை கூறி வந்தது. எடுத்துக்காட்டாக, இயேசுவின் இறப்புக்குப் பின் மரியா திருத்தூதர்களோடு தங்கியிருந் தார். அப்போது அவர் தன்னைப் பற்றிய சில செய்திகளை சீடர்களிடம் கூறியிருக்கலாம். அவற்றில் ஒன்று மரியாவின் பெற்றோர் பெயர். இதன்வழியாக பின்னர் பலருக்கு மரியாவின் பெற்றோர் பெயர் தெரிய வந்திருக்கக்கூடும். இதுதான் பாரம்பரியம். மேலும் பல பக்தி முயற்சிகளும் பாரம் பரியத்தின் வழி நமக்கு கிடைத்தன.

அடுத்து, திருத்தந்தையர்கள் தூய ஆவியாரால் ஏவப்பட்டு எழுதிய மறைத்தூது சுற்று மடல்கள். கி.பி. 300க்குப் பிறகு தோன்றிய நம்பிக்கை கோட்பாடுகள் யாவும் மரபு வழி வந்த போதனைகள். தூய ஆவியார் பெந்தகோஸ்து நாள் தொடங்கி இன்று வரை திருஅவையை வழிநடத்துகிறார். பற்பல உண்மைகளை அவர் வெளிப்படுத்தியும் வருகிறார். குறிப்பாக அருளடையாளங்களின் தோற்றம், திருஅவை சட்டத்திட்டங்கள், திருவழிபாட்டு வழிமுறைகள் இதில் அடங்கும்.

ஆகவே, திருவிவிலியத்தோடு மரபு வழி நாம் பெற்றுக்கொண்ட போதனைகளும் கடவுளு டையதே. இவை இரண்டையும் கலந்து அளிப்பதே நமது மறைக்கல்வி. திருவிவிலியம் மற்றும் பாரம்பரியம் இவற்றை கொண்டு தயாரிக்கப்பட்டதுதான் கத்தோலிக்க மறைக்கல்வி நூல் (Catechism of the Catholic Church). இதுவே நமது மறைக்கல்வியின் இன்றைய கருவூலம். இதன் அடிப்படையில் மறைக்கல்வி பாடநூல்கள் மாணவர்களின் வயதுக்கு ஏற்ப தயாரித்து அளிக்கப்பட் டுள்ளன. இதில், நான்கு முக்கிய அம்சங்கள் உள்ளன. 1. நம்பிக்கை அறிக்கை (விசுவாச பிரமாணம்), 2. மறைவுண்மை கொண்டாட் டங்கள் (அருளடையாளங்கள்) 3. கிறிஸ்தவ நன்னெறி வாழ்க்கை (10 கட்டளைகள்) 4. கிறிஸ்தவ இறைவேண்டல் வாழ்வு

ஆகவே, நாமது இப்பாட நூல்களில் திருவிவிலியம் இல்லை என்று கூற இயலாது. முழு விவிலியமும் படிப்படியாக எளிய முறையில், மாணவர்கள் கிரகித்துக் கொள்ளும் வகையில் இப்பாட நூல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இப்பணியைக் காலத்தின் தேவைக்கேற்ப சீர்செய்யவும், கிறிஸ்துவில் முதிர்ச்சியை நோக்கிய மறையறிவை வழங்கவும் ஒவ்வொரு மறைமா வட்டத்திலும் மறைக்கல்வி ஆணையம் உண்டு. ஆகவே, நம்மில் மறைக்கல்வி ஆசிரியர்கள் தன்னிச்சையாக செயல்படவும் முடியாது. எனவே, பாட நூல்களின் வழியாக உலகெங்கும் தத்தம் ஆயர்களின் கண்-காணிப்பில் ஒரே விளக்கம், ஒரே உண்மை, ஒரே நம்பிக்கை போதிக்கப்படுகிறது. இதுவே நமது சிறப்பு.

-ஆர்.கே.

# பினாங்கில் ‘கிறிஸ்துவைப் பகிர்தல்’ ஏழு வாரப் பயிற்சி நிறைவடைந்தது.

**பினாங்கு** : பினாங்கு மறைமாவட்டத்தின் புதிய மறைப்பரப்பு ஆணையம் ‘கிறிஸ்துவைப் பகிர்தல்’ எனும் நிகழ்வைக் கடந்த 25.05.2021-ல் வெற்றிகரமாக நடத்தியது. 50 பேர் பங்குகொண்ட இந்நிகழ்வு, பினாங்கு, கோலாலம்பூர், மலாக்கா-ஜோகூர் ஆகிய மூன்று மறைமாவட்டங்களுக்காக நடத்தப் பட்டது. ‘கிறிஸ்துவைப் பகிர்தல்’ எனும் இப்பயிற்சி மூன்று பயிற்சிகளை உள்ளடக் பற்றி அறிய விழைவோர் என பலருக்கும் இப்பயிற்சியை நடத்தி வருகிறது.

‘கிறிஸ்துவைப் பகிர்தல்’ என்பது ஏழு வார தொடர் பயிற்சியாகும். இதில் பங்கேற்போர், மறைப்பரப்புக்கான திறனை வளர்ப்பதோடு, மறைப்பரப்பு அன்றாட வாழ்வின் ஒருபகுதியாக விளங்க கற்றுக்கொள்வர். ஏழு வாரங்களுக்கு, ஒவ்வொரு செவ்வாய்க்



கியது. அவை: , இயேசுவை கண்டுகொள்ளு தல், இயேசுவைப் பின் செல்லுதல் மற்றும் இயேசுவைப் பகிர்தல் என்பனவாகும்.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இப்பயிற்சியை நடத்திவரும் அந்த ஆணையம், கத்தோலிக்கர்களை மட்டும் அல்லாது, விசுவாசத்தை இழந்தவர்கள், இயேசுவைப் கிழமையும் இரவு 8.15 முதல் 10.00 மணிவரை இப்பயிற்சி நடத்தப்பட்டது.

‘ஆழத்தில் போடுங்கள்’ எனும் இறுதிப் பயிற்சியில் பினாங்கு மறைமாவட்டத் தின் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களும் முழுமையாகப் பங்கெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில் புதிய மன்றாட்டுகள்



கடந்த மே 01, சனிக்கிழமையன்று சிறப்பிக்கப்பட்ட, தொழிலாளரான புனித யோசேப்பு திருநாளன்று, புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில், ஏழு புதிய மன்றாட்டுகளை இணைத்துள்ளது, திருவழிபாடு மற்றும், அருளடையாளங்கள் பேராயம்.

- மீட்பரின் பாதுகாவலர்
- கிறிஸ்துவின் பணியாளர்
- நோயுற்றோரின் திருப்பணியாளர்
- துயரங்களில் துணையாளர்
- புலம்பெயர்ந்தோரின் பாதுகாவலர்
- இன்னலுற்றோரின் பாதுகாவலர்
- வறியோரின் பாதுகாவலர்

**உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: மானிடமகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள் (யோவான் 6:53)**

# நற்கருணை உயிர் தரும் உணவு

இன்று நாம் கிறிஸ்துவின் திருவுடல், திருரத்தப் பெருவிழாவை கொண்டாட அன்புடன் அழைக்கப்பட்டிருக்கிறோம். இன்றைய முதல் வாசகம், மோசே வழியாக கடவுள் ஏற்படுத்திக்கொண்ட பழைய உடன்படிக்கையைப் பற்றி எடுத்துரைக்கிறது. மோசே இஸ்ரயேல் மக்கள் சார்பாக ஆண்டவருக்கு நல்லுறவுப் பலி செலுத்து வதையும், அவர்கள்மீது உடன்படிக்கையின் இரத்தத்தைத் தெளித்ததையும் எடுத்துரைக் கிறது.

எபிரேயருக்கு எழுதப்பட்ட இரண்டாவது வாசகமானது, தலைமை குருவான கிறிஸ் துவால் ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக் கையைப் பற்றி பேசுகிறது. இயேசு கிறிஸ்து தம்மையே மாசற்ற பலியாக ஒப்புக்கொடுத்து, நமக்கு மீட்பு கிடைக்கச் செய்தார் என்பதை எடுத்துரைககிறது. ஆண்டவர் இயேசு தன்னுடைய இறுதி இராவுணவின்போது - பாஸ்கா உணவின் போது- அப்பத்தைத் எடுத்து, "இது என் உடல்" என்கின்றார்.

"இது உடன்படிககையின் இரத்தம்; பலருக் காகச் சிந்தப்படும் இரத்தம்" என்கின்றார். இயேசு இவ்வாறு சொல்வதன் வழியாகவும், செய்வதன் வழியாகவும் பாஸ்கா உணவிற்கு புதிய அர்த்தத்தைக் கொடுக்கின்றார். புதிய பாஸ்கா உணவில் ஆண்டவர் இயேசு தன்னுடைய உடலையும் இரத்தத்தையும் உணவாகக் கொடுக்கின்றார். அவரே பாவம் போக்கப் பலியாகும் செம்மறியாகிறார். அதை உலகு வாழ்வு பெறுவற்காகக் கொடுகின்றார்.

இயேசு, புதிய உடன்படிக்கை பலியிலே, தூய ஆவியின் துணையால் தன்னை மாசற்ற பலியாக ஒப்புக்கொடுத்து தன் சதையையே, தன் இரத்தத்தையே உணவாக கொடுத்து, என்றுமுள்ள ஓரே பலியையே ஒப்புக் கொடுத்தார். இவ்வுலகின் மீது இறைவன் கொண்ட மேலான அன்பை இவ்விழா நமக்கு எடுத்துரைக்கிறது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய பலன் தருவதில்லை என்று தன் உயிரையே கையளித்து உடலாலும் இரத்தத்தாலும் நமக்கு வாழ்-

நாம் உண்கின்றோம். நற்கருணை என்பது கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமுமாக உள்ளது என இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகிறது. எனவே, நற்கருணை நம்பப்பட வேண்டியது; கொண்டாடப்பட வேண்டியது; அனுபவித்து வாழப்பட வேண்டிய உணவு ஆகும்.

இயேசுவைப் போல பிறர் நலம், பிறரன்பு என்று வாழ்ந்தாலொழிய நற்கருணையை வாழ்வாக்க இயலாது. பிறரன்பு உணர்வோடு வாழப்பட வேண்டிய மறைபொருளை 'ஆமென்' என்று சொல்லி நாவினால் பெற்று மட்டும் திருப்தி அடையலாகாது என்பதை உணர்தல் வேண்டும்.

நம்மில் பலர் திருப்பலியில் பங்கேற்கும் போது, ஆழந்த நிலையில் பங்கேற்கத் தவறுகிறோம். இயேசுவின் அளவில்லா அன்பில் இரண்டறக் கலக்க இயலாமல் கவனத்தைச் சிதறவிடுகி-றோம். திருப்பலியில் இறைவார்த்தை விருந்தோடு நற்கருணை விருந்தும் இடம் பெறுவதால், இரண்டிலும் முழு ஈடுபாடு

ஒளியாகவும் நற்கருணை வாழ்வாகவும் விளங்குகின்றன.

நாம் உடல் உறுப்புகளைத் தானம் செய்யும் போது, ஒரு சில உறுப்புகளை மட்டுமே தானம் செய்வது வழக்கம். இயேசுவோ தம் உடல் முழுவதையும் பலியாக்குகிறார். இது மனுக்குலத்தின் மீது அவர் கொண்ட அன்பின் வெளிப்பாடாக உள்ளது.

நறகருணை விருந்தில் பங்குபெறுவதன் மூலம் நாம் சிலுவைப்பலியையும் கடவுளின் அளவற்ற அன்பை வாழ்ந்து காட்டுகிறோம்.

-M.செல்வராஜூ, மலாக்கா

**கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம்**

வி.ப. 24: 3-8
திபா 116: 12-13. 15-16. 17-18
எபி 9: 11-15
மாற்கு 14: 12-16, 22-26

ஞாயிறு வாசகம் —ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் —ஆண்டு 1